உ

ஸ்ரீ காந்தியாய நம:

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

கலியுக அவதார மூர்த்தியாகிய

மகாத்மா

காந்தி திருநாள்

(இரண்டாம் பாகம்)

2 - JUL 1924

இது

வதிலூர்

இராம—சடகோபனால்,

இயற்றப்பெற்று

திருக்கோவலூர்

P. வேணுகோபால முதலியாரால்

தமது

ஸ்ரீநாராயண விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

[விலை அணா 0 1 0

Rights Reserved.

1924.

N24
181323

உ

ஸ்ரீகாந்தியாய நம:

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

394.814
2925

கலியுக அவதார மூர்த்தியாகிய

மகாத்மா

காந்தி திருநாள்.

(இரண்டாம் பாகம்)

இது

வடிலூர்

இராம—சடகோபனால்

இயற்றப்பெற்றது

திருக்கோவலூர்

P. வேணுகோபால முதலியாரால்

தமது

ஸ்ரீநாராயண விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிடப்பெற்றது] [விலை அணா 0 1 0

All Rights Reserved.

1924.



ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— தஞ்சாவூர் ஜில்லா வடுவூர், இராம-சடகோபன் அவர்கள் எழுதின 'மகாத்மா காந்தி திருநாள்' இரண்டாம்பாக புத்தகத்தை ஷை யார் எனக்குச்சகல சுதந்திரத்துடன் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென, சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் செய்திருக்கிறது.

இப்படிக்கு
P. வேணுகோபால முதலியார்.

18323

உ

காந்தியாய நம:

(காப்பு)

" சாந்தமய மாய்விளங்குஞ் சாதுவென வேத்துகின்ற
காந்தி திருநாள் கழறுதற்குப்—போந்த
அறிவு நலனு மளித்தென்னைக் காக்கும்
அறை சுடரின் றாளே யரண்":

தாழ்ந்தார் முன்னேற்ற அழைப்பு.

'பச்சமலை. பவளமலை எங்களது நாடு'
என்ற மெட்டு-

1 சுத்தமுறக் குளித்தணிவாய்
சொந்ததேச உடையே—தம்பி சொந்ததேச உடையே
சோம்பலற உழைப்பதுவுஞ்
சுதந்திரத்தின் நடையே (சுத்த)

2 பலறயர்களை நெய்ததுண்டு
பாரெங்கினும் உண்டு—தம்பி பாரெங்கினுமுண்டு
பழித்ததினால் முளைத்ததிந்த
தரித்திரத்தின் தொண்டு (சுத்த)

3 மெத்தவிலை சாசமாகும்
வீட்டினிலே நூத்துத்—தம்பி வீட்டினிலே நூத்து
வீண்பொழுதை மீத்திடுவாய்
நாட்டுத்தரி கோத்து (சுத்த)

4 புலைகளவு நீத்திடுவாய்
புன்மையென வேர்த்துத்-தம்பி புன்மையென வேர்த்து
புலையரென தாழ்ந்ததுவும்
போதுமெனப் பேர்த்து (சுத்த)

5 சத்தியங்கை பிடித்தொழுகும்
சாந்தகுலம் நாமே—தம்பி சாந்தகுலம் நாமே
சன்மார்க்கம் கொண்டுலவ
சார்ந்ததுயர் போமே (சுத்த)

6 மதுவெறியில் மூழ்கினோர்க்கு
மதிப்பொருக்காலுண்டோ தம்பி—மதிப்பொருக்காலுண்டோ
மானங்கெட்ட குடிகுடித்தல்
என்னலாபங் கண்டோ

7 மாட்டிறைச்சி தின்றபேர்க்கு
மழுங்கிடுமே புத்தி தம்பி—மழுங்கிடுமே புத்தி
வாழ்வுயருஞ் செத்தமாட்டைப்
புதைத்திடுவாய் நத்தி (சுத்த)

8 அறிவுடையோர் சொல்லுவதும்
அருந்தமிழின்பாட்டே தம்பி—அருந்தமிழின்பாட்டே
அனுசரித்த பேர்க்குமன்றே
அகன்றொழியுந் தீட்டே (சுத்த)

9 பாணர்பணி தெய்வம்வந்து
பக்கம்நின்று காக்குந்தம்பி—பக்கம்நின்று காக்கும்
பரமபத நிலையருளிப்
பண்டிழிவைப் போக்கும் (சுத்த)

10 நந்தன்பணி தெய்வம் வந்து
நல்வழியைக் காட்டுந் தம்பி—நல்வழியைக்காட்டும்
நல்வழியில் நின்றபேர்க்கே
நல்லமுதை யூட்டும், (சுத்த)

தேசியக்கொடித் திருநாள்.

'காந்திமகான் சொல்லைக்கேளுங்கள்'
என்ற மெட்டு.

1 பாரதக்கொடியை ஏந்துங்கள் —தமிழ்ப்
பாமணத் தெளிவை மாந்துங்கள்
வீரர்கள் மணிகாள் சேர்ந்துங்கள்
வெற்றிப் படையிடை நீந்துங்கள் (பாரத)

2 சக்கரக் கொடியைத் தாங்குங்கள்—இனித்
தக்கவ ரினத்திற் றேங்குங்கள்
இக்கரை யடிமை நீங்குங்கள்—புவி
எங்குஞ் சுதந்தர மோங்குங்கள் (பாரத)

3 முக்குறிக் கொடியை நாட்டுங்கள்—முனி
முத்தமிழ் முரசைத் தீட்டுங்கள்
மைக்குண மயலை யோட்டுங்கள்—தமிழ்
மக்களின் வலிமை காட்டுங்கள் (பாரத)

4 பஞ்சம் பிணிமுதல் பறக்குதுபார்—இந்தப்
பாரெங்கும் மங்களம் நிறக்குதுபார்
அஞ்சுத லிங்வனந் துறக்குது—பார்
ஆன்ம சக்திக்கொடி சிறக்குதுபார். (பாரத)

5 காந்தி மகான்மனப் பூர்த்தியிலே—தந்த
கற்பகக் கொடியின் ஆர்த்தியிலே
அந்திப் பகல்நிசி சேர்த்தியிலே—நங்கள்
ஆருயிர் வழங்குவம் கீர்த்தியிலே. (பாரத)

கொட்டுங்கடி.

இந்திய ஸ்திரிகளுக்கு ஒரு வார்த்தை.

சிதம்பரக்கும்மி மெட்டு.

1 கொட்டுங்கடி பெண்காள் கொட்டுங்கடி கண்காள்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி
குலுங்கக் குலுங்க நகைத்துக் குதித்து
கோலிக் கூடிக் கொட்டுங்கடி—லைலைய
கூவிப் பாடி தட்டுங்கடி (கொட்)

2 கட்டுங்கடி கதர் கட்டுங்கடி காந்தி
கைராட்டு நூல்நூத்துக் கட்டுங்கடி
பட்டுப் புடவையில் வெட்டு ரவிக்கைகள்
பகட்டு தென்றுகை தட்டுங்கடி—அது
பட்டிகட் கென்றுகை தட்டுங்கடி (கொட்)

3 சிக்கன முமசச் சுத்தமு முள்ளவள்
சீருடை யாள் பெரும் பேறுடையாள்
மிக்குள மங்கையர் மினுக்கிக் குலுக்கி
வெட்கமுஞ் செட்டதைக் கொட்டுங்கடி—நார்
வேசைய ரென்றுகை தட்டுங்கடி (கொட்)

4 வரவ றிந்த செலவாளி—அவள்
வம்சம் வளர்க்கும் விரகாளி
வட்டிக்கு வாங்கிப்ப கட்டிக்கொள் ளுமவர்
மட்டிக ளென்றுகை கொட்டுங்கடி—மான
மற்றவ ரென்றுகை தட்டுங்கடி. (கொட்)

ஸ்வராஜ்யம் வேணுமா?

போலித் தேசிய வாதிகளுக்கு ஒரு அ[illegible]

'அய்யாப்பழனிமலை வேலா' என்ற மெட்டு.

ஸ்வராஜ்யம் வேணுமா ஸ்வராஜ்யம் வேணுமா
ஸ்வராஜ்யம் வேணுமா ஸ்வராஜ்யம்

181323

1 சொந்தவேலை செய்ய வின்னம் மனமில்லையே—இங்கு
சுதந்தரம் வந்துமதிற் குணமில்லையே. (ஸ்வ)
2 வீட்டுவேலை செய்ய வின்னம் மனமில்லையே—நீங்கள்
வீண்பேச்சுப் பேசுவதற் பயனில்லையே (ஸ்வ)
3 சோக்குவேட்டி விட்டுவிட மனமில்லையே—அதைச்
சுட்டெரித்த சாம்பலெங்கும் காணவில்லையே (ஸ்வ)
4 நோன்புநோத்துத் தோத்திரங்கள் செய்யவில்லையே—ராட்டு
நூல்நூத்துக் சுதேதர் துணி நெய்யவில்லையே (ஸ்வ)
5 கத்தர்சேலை கட்ட வின்னம் மனமில்லையே—நீங்கள்
கண்டபடி பேசுவதிற் குணமில்லையே (ஸ்வ)
6 ஓரூரில் வேலைசெய்யத் திறனில்லையே—நீங்கள்
ஊரூராய்ச் சுத்துவதிற் குணமில்லையே. (ஸ்வ)

காலமீது காலமிதுகாண்.

'வாரிருக்குது தோலிருக்குது' என்ற நந்தனர் கீர்த்தனை மெட்டு.

1 காலமீது காலமிதுகண் விழித்துக் கொள்ளுங்களேன்—நம்
காந்திபுள்ள போதேதனை யவிழ்த்துக்கொள்ளுங்களேன் (கா)
2 காற்றடிக்கும் போதே நீங்கள் தூற்றிக்கொள்ளுங்களேன்
காந்தியுள்ள போதேதுய ராற்றிக்கொள்ளுங்களேன் (கால)
3 என்ன தூக்கம்! என்ன தூக்கம்! இன்னந்தூக்கமா?
எழுந்திருந்து யெழுந்திருந்து படுக்கநோக்கமா? (கால)
4 பச்சைப் பிள்ளை சுத்திக்கத்தும் பாவம்பாருங்களேன்
படுக்கைவிட்டு யெழுந்திருந்து பையவாருங்களேன் (கால)
5 சோபாகட்டில் மெத்தைகளைத் துறந்துவாருங்களேன் நீங்கள்
சுகித்திருக்கும் ஆசைகளை மறந்து வாருங்களேன் (கால)
6 சத்ய த்யாக சாந்தஞான தருமமூர்த்தியை—ஐயோ
சாற்றிவைத்தோம் சிறையிலேநந் தயாமூர்த் தியை. (கால)

தேவ தாசிகளே.

'ஆண்டிபண்டாரம்' என்ற மெட்டு.

தேவ தாசிகளே செய்யும் பாவம் யோசிங்களேன்

1 தெய்வங்கட்கு அடிமைசெய்யும்
திருக்குலத்தி லுதித்த நீங்கள்
ஐயய்யோ மானம்விற்றே
ஆக்கை வளக்குறீங்க (தேவ)

2 காசுக்கு ஆசைகொண்டு
கண்டபேரைத் தழுவுறீங்க
கருங்கிரந்தி நோய்பிடித்துக்
காலமெல்லாம் மழுங்குறீங்க (தேவ)

3 தாலிகட்டிக் கைபிடித்த
தாரம்நொந்து தனியிருந்து
கோலிச்சிந்து கண்ணீருங்கள்
குடியைக்கரு வறுத்திடாதோ. (தேவ)

தாய்க் கிழவிகளே பெற்றீர் நோய்க்குழவிகளே

4 கண்மணிபோல் பெண் வளர்த்தீர்
கண்டபேரைத் தழுவவிட்டீர்
கட்டடங்கா நோய்பிடித்துக்
கண்ணில் நீரை நழுவ விட்டீர் (தேவ)

5 சல்லாவுடை வுடுத்துறீங்க
தைதா நடை பழக்குறீங்க
கல்லாத பாவமலலோ
காலமெல்லாம் துடிக்குறீங்க (தேவ)

6 மினுக்குறீங்க குலுக்குறீங்க
வீசிவலே பிடிக்குறீங்க
வெள்ளயப்பர் வறண்டுபோனல்
விரட்டி நீங்க முடிக்குறீங்க (தேவ)

7 பொருளிழந்தார் வலுவிழந்தார்
புலனிழந்தார் புறக்கணித்தீர்
மருகிகின்று விட்டமூச்சு
மர்மம் பிளந்திடாதோ (தேவ)

8 ஒன்றலவே அணைவதுவும்
உங்களுக்கோ சுகமிலேயே
நன்றெனநீா திருந்தவென்று
நான் பணிகிதேன் கும்பிடம்மா. (தேவ)

பாரத நாடு.

'செந்தமிழ் நாடேனும் போதினிலே' என்ற மெட்டு.

1 பாரத நாடெனும் போதினிலே—தனிப்
பாசம் பிறக்குது வாதினிலே உயர்
வீரர்தம் நாடெனும் போதினிலே—எங்கள்
மேனி சிலிர்க்குது யாதெனிலே (பாரத)

2 வேலை பரந்தொளி சூழ்நாடு—அயில்
வேலை முனிந்தவர் வாழ்நாடு
சோலை யடர்ந்து பரந்தளி சூழ்தரத்
தோகை கிடந்து துயில்நாடு (பாரத)

ஞானஞ் சிறந்த புகழ்நாடு—உயர்
ஞாயம் வளர்ந்து திகழ்நாடு
மான மிருந்து துலங்கிய மங்கையர்
வாழ்க்கை செறிந்த வென் தாய்நாடு (பாரத)

4 வெற்பிலுயர்ந்த புகழ்நாடு—பல
விந்தைக ளெங்குந் திகழ்நாடு
அற்பு மலர்ந்து பொலிந்து யிலங்கிய
ஆரணம் நின்றொலி தாய்நாடு. (பாரத)

5 கல்வி வளர்த்த நிருபர்களும்—திரி
கால முணர்ந்த குரவர்களும்
நல்லறிவா லுயர் நாரியரும் புகழ்
நாட்டிச் சிறந்த வென்தாய் நாடு (பாரத)

6 வைத்தியங்கண்ட முனிநாடு—ரஸ
வாதமறிந்த மணிநாடு
கைத் தொழிலெங்குங் கமழ்தர மேதகு
காலப் பயிர்செய் தவழ்நாடு (பாரத)

7 சோதரர் முன்னணி நீந்திடவும்—ரண
சோரியில் தோய்ந்துயிர் மாய்ந்திடவும்
மாதர்களங்கியில் மூங்கிடவும்—உயர்
மானம் வளர்த்த வென்தாய்நாடு (பாரத)

8 சத்தியம் நின்ற தலைநாடு—உயர்
சாந்த மிருந்து தவழ்நாடு
பத்தியி னூலிழி பாதகருமருட்
பாதமணிந்துயுந் தாய்நாடு. (பாரத)

இரண்டாம்பாகம் முற்றிற்று.

போரிபந்தர் காம்சந்தின் புதல்வரென வந்துதித்துப்
பாரினிலே யிந்தியர்கள் படுந்துன்பமதை யொழிப்பான்
வீரமுடன் பிறப்புரிமை தனைவிளக்கி வேண்டுநர்க்குக்
காவெனச்சென் றுதவுகின்ற காந்தியடி மலர்ப்பணிவாம்.

181323

ஸ்ரீநா[illegible] விலாசம் பிரஸ் திருக்கோவலூர்.

உ

ஸ்ரீ காந்தியாய நம:

வேலூர் பிரமஸ்ரீ இராம—சடகோபன் அவர்களால்
இயற்றியது.

விளம்பரம்.

1	காந்தி திருநாள் முதற்பாகம்	0	0	6
2	ஷை இரண்டாம் பாகம்	0	1	0
3	மகாத்மா காந்தி சரித்திர திருப்புகழ்ச்சிந்து	0	2	0

., வேணு